# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-4 | Date | : 21.01.2025 |
| Case No. | : **O.S. 118/2020** | Nationality | : Indian |
| Name | : ராஜேந்திரன் | Religion | : |
| Father's/Husband's Name | : வைரக்கண்ணு | Age | : 63 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.4</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த தெருவில் குடியிருந்து வருகிறேன் என்றால் பாப்பாக்குடி வெள்ளாளர் தெருவில் குடியிருந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கு யாரால் யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரோஜா சாந்தி என்பவருக்கு பவர் கொடுத்துள்ளார். வழக்கு யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் நிரூபண வாக்குமூலத்தில் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் வீட்டில் வைத்து கையொப்பம் செய்தேன். அதில் என்ன விவரம் உள்ளது என்று நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை எனக்கு படிக்க தெரியாது. என்னை நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல யார் அழைத்தது என்றால் சாந்தி மற்றும் சரோஜா வகையறா அழைத்தார்கள். என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரோஜாவும் சாந்தியும் குடியிருக்கும் இடத்தின் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்தின் சர்வே தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சுமார் 36 குழி இருக்கும்.

தாவா சொத்து யார் பெயரில் உள்ளது என்பதற்கான ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும் வாதி கேட்டு கொண்டதற்கிணங்க அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு விவரம் தெரிந்தது முதல் வாதிதான் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.01.22 15:26:56 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.